**மாத்தறை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 மாத்தறை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 மாத்தறை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 22 குழுக்களுக்கு முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்படுவதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தில் அடங்கியுள்ள கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 22 கமநலசேவை குழுக்களினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய அங்கங்களுள் ஒன்றான தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட படிவத்திற்கு அமைவாக நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 22 கமநலசேவை குழுக்களின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக காணி, கட்டடம் மற்றும் உபகரணங்களுக்கான கிரயம், திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் தேறிய பெறுமதி ஆகியவற்றைக் காட்டும் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கணக்கீட்டு அறிக்கை படிவத்திற்கு அமைய, நிலையான சொத்துக்களின் கிரயம், வருடாந்த சேர்ப்புகள், வருடாந்த தேய்மானம், திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் தேறிய பெறுமதி ஆகியவற்றுக்கான படிவங்கள் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 22 நிலையங்களிலும் தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| (இ) | 12 குழுக்களின், நிதி நிலைமைக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மொத்தமாக ரூபா 72,159,387 இற்குரிய 257 காசு நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் அந்தந்தக் குழுக்களின் உரிய நிறைவேற்றுச் செயலாளர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் நிதி நிலைமைக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் தற்போது நிறைவேற்றுச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் இடப்படும் சந்தர்ப்பத்திலேயே அவை அங்கீகரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்புருபிட்டிய, வில்பிட்டிய, தலல்ல, தெய்யந்தர, அக்குரஸ்ஸ, பெரலபனாதர, வெலிகம மற்றும் தந்தெனிய ஆகிய 08 குழுக்களுக்குச் சொந்தமான 1,327 பேர்ச்சஸ் கொண்ட 08 காணித் துண்டுகள், மெதஉயன்கொட, மிரிஸ்ஸ, தெனியாய, ஹக்மன, கனங்கே, பஸ்கொட, ரன்ஸேகொட, மாலிம்பட, கெக்கனதுர, திக்வெல்ல, மடிஹகொடகம, மொரவக மற்றும் ஊருபொக்க ஆகிய 13 குழுக்களின் அளவு குறிப்பிடப்படாத 13 காணித் துண்டுகள், மொத்தம் 45,340 சதுர அடி கொண்ட 12 அலுவலகக் கட்டடங்கள், ஏனைய 28 கட்டடங்கள் மற்றும் பரப்பளவு குறிப்பிடப்படாத 10 அலுவலகக் கட்டடங்கள் உள்ளடங்கலான நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதியறிக்கைகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலையான சொத்துக்கள் கணக்கிடப்பட்டுள்ளதுடன், அவற்றை கணக்கீடு செய்வதற்குத் தேவையான பெறுமதிகள் தற்போது மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டிலிருந்து கணக்குகளில் அவற்றை உள்வாங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | குழுக்களுக்குச் சொந்தமான அனைத்து நிலையான சொத்துக்களையும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும், நிதியறிக்கைகளின் ஊடாக அவற்றை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் மடிஹகொடகம, கம்புருபிட்டிய மற்றும் பெரலபனாதர விவசாயச் சேவைக்குழுக்களின் | விவசாய வங்கிகளின் செலவுகளை விவசாயச் சேவைக்குழுக்களின் மூலம் பொறுப்பேற்பதற்கு விவசாய | குழுவின் நிதிக்கூற்றுக்களினுள் விவசாய வங்கிகளின் ஒட்டுமொத்த |

| | | | |
|---|---|---|---|
| | முறையே ரூபா 108,685, ரூபா 20,596 மற்றும் ரூபா 49,467 ஆகிய மொத்த விவசாய வங்கிச் செலவுகள் அக்குழுக்களின் செலவுகளாகக் கணக்கிடப்பட்டமையால், அக்குழுக்களின் ஆண்டின் மொத்த இலாபம் ரூபா 178,748 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அபிவிருத்தித் திணைக்களத்தின் 436/99 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 1999.11.25 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கையின் 10.1 இன் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | செயற்பாடுகளையும் செயற்திறனையும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மடிஹகொடகம விவசாயச் சேவைக்குழுவின் 1660275 ஆம் இலக்க நடைமுறைக்கணக்கில் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட ரூபா 262,853 மீதியானது நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2020 ஜூலை 31 ஆம் திகதியின் பின்னர் இதுவரையில் வங்கி இணக்கக் கூற்றுக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விதை மற்றும் முற்பணக் கணக்கை மூடி முடிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் அதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், தற்போது நடைமுறைக்கணக்கில் உள்ள மீதி ரூபா 160,853 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி நிலைமைக்கூற்றினுள் நடைமுறைச் சொத்துக்களாகக் கணக்கு மீதியை உள்ளடக்க வேண்டும் என்பதுடன், கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற மாதங்களுக்கான வங்கி இணக்கக் கூற்றுக்களும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ரன்ஸேகொட, கம்புருபிட்டிய, பஸ்கொட, அக்குரஸ்ஸ, ஹக்மன மற்றும் பெரலப்பனாதர விவசாயச் சேவைக்குழுக்களின் கடந்த ஆண்டுகளுக்குரிய மொத்தமாக ரூபா 334,423 செலவுகள், மீளாய்வாண்டின் செலவுகளாகக் கணக்கிடப்பட்டிருந்தன. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதியறிக்கைகளைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதியறிக்கைகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலவுகளை அந்தந்த ஆண்டுகளுக்குரியவாறு இனங்கண்டு, அதற்கமைய கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | கனங்கே விவசாயச் சேவைக்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்கான பண்டச் சரிப்பாய்வின் மூலம் இனங்காணப்பட்டிருந்த, 2020 ஜனவரி 16 ஆம் திகதி ரூபா 22,410 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட விரலடையாள | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதியறிக்கைகளைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் | கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்கச் சொத்துக்களின் தன்மையைப் வகைப்படுத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், உரியவாறு |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் தேய்மானச் சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அது மீளாய்வாண்டில் இருப்பு இடாப்பில் பதியப்பட்டிருக்கவும் இல்லை. அதேபோன்று, மாலிம்பட விவசாயச் சேவைக்குழுவினால் மீளாய்வாண்டில் ரூபா 60,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட விரலடையாள இயந்திரம் சொத்தாகக் கருதப்படாமல், பொருத்துகைச் செலவாகக் கணக்கெழுதப்பட்டமையால், மீளாய்வாண்டின் நடைமுறையல்லாச் சொத்துக்களும் செயற்பாட்டு மேலதிகமும் அத்தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன், தந்தெனிய விவசாயச் சேவைக்குழுவிலும் ரூபா 60,000 கிரயத்தைக் கொண்ட கைவிரலடையாள இயந்திரம் தேய்மானம் செய்யப்படாததினால், ஆண்டின் மேலதிகம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அளவு ரூபா 6,000 இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டுகளில் நிதியறிக்கைகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ஊருபொக்க, ஹக்மன, தெனியாய, கம்புருபிட்டிய மற்றும் மாலிம்பட விவசாயச் சேவைக்குழுக்களுக்குச் சொந்தமான நிலையான வைப்புகளுக்காகக் கிடைக்க வேண்டிய வட்டி முறையே ரூபா 50,106, ரூபா 240,020, ரூபா 21,118, ரூபா 28,833 மற்றும் ரூபா 28,555 என்பன கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாததினால், மீளாய்வாண்டின் மேலதிகம் மற்றும் நடைமுறைச் சொத்துக்களின் அளவு அத்தொகைகளினால் | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதியறிக்கைகளைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதியறிக்கைகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | காலப்பகுதிக்குரிய நிலையான வைப்புகளுக்கான வட்டியைச் சரியாகக் கணக்கிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், உரிய சீராக்கங்களை கணக்குகளில் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், வில்பிட்டிய மற்றும் தெய்யந்தர விவசாயச் சேவைக்குழுக்களில் முறையே ரூபா 19,160 மற்றும் ரூபா 183,912 இனால் நிலையான வைப்பு வட்டி வருமானம் குறைவாக்க் கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (எ) | கணக்கீட்டு நியமங்களின்படி வருமானத்திற்கு எதிராகச் செலவுகளை ஈடுசெய்து காட்டக் கூடாது என்ற போதிலும், மொரவக விவசாயச் சேவைக்குழுவின் மீளாய்வாண்டின் ஏக்கர் வரி கணக்கீட்டின் போது, அதன் வருமானமான ரூபா 857,955 இற்கு எதிராக ரூபா 106,752 ஏக்கர் வரி ஊக்கத்தொகை மற்றும் பிரதான காரியாலயத்திற்கான 20 சதவீத ஏக்கர் வரிப் பங்கான ரூபா 160,950 என்பவற்றை ஈடுசெய்த பின்னர், அதன் தேறியப் பெறுமதியான ரூபா 590,431 நிதிச் செயற்திறன் கூற்றில் உள்வாங்கப்பட்டிருந்தது. மேலும், ஏக்கர் வரி வருமானமானது திரள்வு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று, வருமானச் செலவுக் கணக்குகளைப் பேணும் போது செலவுகளை ஈடுசெய்து காட்டக் கூடாது என்ற போதிலும், கிரிந்த புஹல்வெல்ல விவசாயச் சேவைக்குழுவின் மீளாய்வாண்டின் ஏக்கர் வரி வருமானம் ரூபா 282,695 ஆக இருந்தும், அது நிதிச் செயற்திறன் கூற்றில் செலவுகளைக் கழித்து ரூபா 196,127 எனும் தேறியப் பெறுமதியில் காட்டப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஏக்கர் வரி வருமானத்தைத் திரள்வு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கும், வருமானச் செலவுக் கணக்குகளைப் பேணும் போது வருமானத்திற்கு எதிராகச் செலவுகளை ஈடுசெய்து காட்டாதிருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | தெனியாய விவசாயச் சேவைக்குழுவினால் முந்தைய | உடன்படுகின்றேன். எதிர்வரும் ஆண்டுகளில் கணக்கு | காலாவதியான காசோலைகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளில் வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 76,640 பெறுமதியான காசோலைகள், மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கிடப்பட்டமையால், மீளாய்வாண்டின் மிகை அத்தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | அறிக்கைகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட மத்திய நிலைய விடயப்பரப்பு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இக்காசோலைகள் 2018, 2019 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட காசோலைகளாகும். | மீண்டும் வருமானமாகக் கணக்கிடும் போது, சரியான காலப்பகுதிக்குரியவாறு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | வில்பிட்டிய விவசாயச் சேவைக்குழுவின் மீளாய்வாண்டிற்குரிய ஏக்கர் வரி வருமானம் ரூபா 209,200 ஆக இருந்தபோதிலும், பணமாகப் பெற்ற ரூபா 111,429 மாத்திரம் வருமானமாகக் கொள்ளப்பட்டமையால் ஆண்டின் மேலதிகம் ரூபா 97,771 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், தெய்யந்தர விவசாயச் சேவைக்குழுவிலும் மீளாய்வாண்டிற்குரிய ஏக்கர் வரி வருமானம் ரூபா 295,550 ஆக இருந்தபோதிலும், பணமாகப் பெற்ற ரூபா 369,257 ஆண்டின் வருமானமாகக் கருதப்பட்டமையால் ஆண்டின் மேலதிகம் ரூபா 73,707 இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய வருமானங்களை இனங்கண்டு அந்த ஆண்டிலேயே கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், உரிய சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (ஒ) | மாலிம்பட விவசாயச் சேவைக்குழுவின் மீளாய்வாண்டின் அறை வாடகை வருமானம் ரூபா 66,000 ஆக இருந்தபோதிலும், அது ரூபா 42,000 என ரூபா 24,000 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தமையால், மேலதிகம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அத்தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய வருமானங்களை இனங்கண்டு அந்த ஆண்டிலேயே கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், உரிய சீராக்கங்களை கணக்குகளில் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | அக்குரஸ்ஸ விவசாயச் சேவைக்குழுவின் மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி வருமானம் ரூபா 296,800 ஆக இருந்தபோதிலும், அது ரூபா 354,459 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால், மீளாய்வாண்டின் மேலதிகம் ரூபா 57,659 இனால் அதிகமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி – |
| (ஔ) | மெதஉயன்கொட விவசாயச் சேவைக்குழுவின் கொண்டுசெல்லும் பெறுமதி பூச்சியமாகக் காணப்பட்ட, ரூபா 614,651 மொத்தக் கிரயத்தைக் கொண்ட 50 நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்பாட்டில் இருந்தபோதிலும், அச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (க) | மெதஉயன்கொட விவசாயச் சேவைக்குழுவின் மீளாய்வாண்டின் சொத்து மீதிகள் ரூபா 435,503 மற்றும் பொறுப்பு மீதிகள் ரூபா 15,284 என்பன எவ்வித அங்கீகாரமுமின்றித் திரண்ட நிதியத்துடன் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்துடன் கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், அங்கீகாரம் பெறாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கா) | மெதஉயன்கொட விவசாயச் சேவைக்குழுவின் 2023 ஆம் ஆண்டில் மானிய உரத்தின் கீழ் | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் | கணக்குகளில் சரியாகச் சீராக்கங்களை மேற்கொண்டு, |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண உதவி ஆணையாளருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,875,064 தொகை, அந்த ஆண்டின் வருமானமாகக் கொள்ளப்பட்டு இழைக்கப்பட்ட தவறு நடப்பு ஆண்டிலும் திருத்தப்பட்டு நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அத்தொகையை நடைமுறைப் பொறுப்பாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கி) | மெதஉயன்கொட விவசாயச் சேவைக்குழுவினால் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய, ஆண்டின் இலக்கிடப்பட்ட ஏக்கர் வரி வருமானத்தின் 20 சதவீதத்திற்குச் சமமான தொகை ரூபா 38,080 ஆக இருந்தபோதிலும், அது ரூபா 58,229 எனக் கொள்ளப்பட்டமையால் ஏற்பட்ட ரூபா 20,149 வேறுபாட்டினால் மிகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமதிகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (கீ) | வெலிகம விவசாயச் சேவைக்குழுவினால் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய, யூரியா மற்றும் MOP விற்பனையின் மூலம் கிடைத்த ரூபா 2,000,000 தொகையானது திரட்டிய நிதியத்துடன் சீராக்கம் செய்யப்பட்டமையால், செலுத்த வேண்டிய யூரியா மற்றும் MOP கணக்கு அத்தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய கணக்குகளைச் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கு) | கிரிந்த பூஹல்வெல்ல விவசாயச் சேவைக்குழுவின், மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் காணப்பட்ட உர இருப்பு ரூபா 1,920,420 மற்றும் MOP இருப்பு ரூபா 3,201,300 என்பனவும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட உர இருப்பு ரூபா 173,100 மற்றும் MOP இருப்பு ரூபா 2,776,440 என்பனவும் நிதிக்கூற்றுக்களில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டு ஆரம்ப மற்றும் இறுதி இருப்புப் பெறுமதிகளைச் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், உரிய சீராக்கங்களை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டும். |

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 விவசாயச் சேவைக்குழுக்களின் 15 கணக்கீட்டு விடயப்பரப்புகளில், நிதிக்கூற்றுக்களின்படி காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிப் பெறுமதிக்கும் அவற்றுடன் தொடர்புடைய சார்புடைய அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கும் இடையே ரூபா 777,977 பெறுமதியான இணக்கப்பாடின்மைகள் காணப்பட்டன. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கு மீதிகளுக்கும் சார்புடைய அறிக்கைகளுக்கும் இடையிலான இணக்கப்பாடின்மைகளுக்கான காரணங்களை இனங்கண்டு திருத்தப்பட வேண்டும். |

**1.3.4கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 22 விவசாயச் சேவைக்குழுக்களுக்குச் சொந்தமான ரூபா 26,876,340 பெறுமதியான 121 கணக்கீட்டு விடயப்பரப்புகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சான்றுகள் தணிக்கைக்குச் சமர்ப்பிக்கப்படாததினால், அக் கணக்கு மீதிகளைத் | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் இவற்றைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் கணக்காய்வினால் கோரப்பட்ட சான்றுகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தணிக்கையின் போது பரிசோதிக்க முடியாமல் இருந்தது.

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) | பிரிவு 30 (1)(2)(3)(4) மற்றும் (5) | குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய அனைத்து வயற் காணிகளையும் நெற்பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன், நெல் பயிர்ச் செய்கை செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது பல் வருடங்கள் அல்லாத பயிர்கள் அல்லது அரை ஆண்டுப் பயிர்கள் அல்லது நீண்ட காலப் பயிர்கள் பயிர்ச் செய்யக்கூடியதாக இருந்த போதிலும், 22 கமநல அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 13,990 ஏக்கர் வயற் காணிகளை பயிர் செய்கைக்காக வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | உடன்படுகின்றேன். தரிசு நிலங்களைச் சரியாக இனங்கண்டு பயிர்ச் செய்கைக்கு உட்படுத்துவதற்காக 2025/26 பெரும் போகத்திற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது 2025 சிறு போகத்தில் 380 ஏக்கர் நிலப்பரப்பு பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளுக்கு இணங்க பயிர்ச் செய்யக்கூடிய ஒவ்வொரு வயல் நிலத்தையும் நெற்பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ii) | பிரிவு 56 (3)(4) | 20 விவசாயச் சேவைக்குழுக்களில் மீளாய்வாண்டின் இறுதியில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,399,538 ஏக்கர் வரி நிலுவையைச் செலுத்துவதற்குத் தவறியமை சம்பந்தமாக, உரிய பிரிவின் | தலல்ல, மிரிஸ்ஸ மற்றும் கிரிந்த ஆகிய குழுக்களில் நிலுவையான ஏக்கர் வரிகள் அறவிடப்பட்டுள்ளன. ஏனைய குழுக்களில் நிலுவையாகவுள்ள ஏக்கர் வரிகளை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் | காலப்பகுதியில் வரியைச் செலுத்தத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், செலுத்தத் தவறிய தொகையினை அறவிடுவதற்குச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 110 | 22 விவசாயச் சேவைக்குழுக்களில் இழப்புகள் மற்றும் நட்டங்கள் சம்பந்தமாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 751, 752 | 22 விவசாயச் சேவைக்குழுக்களில் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். மத்திய நிலையங்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதனுடன் தொடர்புடைய விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | நி.பி. 757(2)(அ)(ஆ) மற்றும் (4) | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் வருடாந்தப் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்தப் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றிக்கை | | | |
| (i) | 2016 செப்டம்பர் 08 ஆம் திகதிய 07/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கை. | ஒவ்வொரு விவசாயச் சேவை மத்திய நிலையத்தையும் அண்டியதாகக் கூட்டெரு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றபோதிலும், விவசாயச் சேவைக்குழுவினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டெருப் போசணைத் திட்டங்கள் தற்போது நடைமுறையில் இல்லாத காரணத்தினால் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் லை. அம்மத்திய நிலையங்களில் தனியான விற்பனை நிலையங்கள் இல்லையெனினும் விவசாயப் பொருட்களின் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக த் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு விவசாயச் சேவை மத்திய நிலையத்தையும் அண்டியதாகக் கூட்டெருத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவ தற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 07/2014 (107 திருத்தப்பட்ட னை) ஆம் இலக்க சுற்றறிக்கை | தொடர்புடைய சுற்றறிக்கையின்படி விவசாயச் சேவைக்குழுவொன்று நாளாந்தம் வைத்திருக்கக்கூடிய கைவசப் பண எல்லை ரூபா 10,000 ஆகும். எனினும், 03 குழுக்களினால் மீளாய்வாண்டிற்குள் 07 முதல் 49 வரையிலான | உடன்படுகின்றேன். நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக வங்கிக்குச் செல்ல முடியாத நிலை காணப்பட்டமையினால் பண வைப்பீடு செய்வது தாமதமானது. எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கப்பாட்டைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், கால ரீதியாக இந்த அதிகபட்சப் பண எல்லை போதுமானதாக இல்லையெனில் அதனைத் திருத்தியமைப்பதற்கா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாட்களில் நாளாந்தப் பண மீதியானது ரூபா 10,500 முதல் ரூபா 1,381,855 வரையான அளவுகளில் கைவசம் வைக்கப்பட்டிருந்தது. | | வது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2019 செப்தம்பர் 08 ஆந் திகதிய 7/15/18/சோ.வி/பொதுதா.கொ. ஆம் இலக்க கடிதம் | விவசாயச் சேவை மத்திய நிலையத்திலோ அல்லது விவசாயச் சேவை மத்திய நிலையங்களினால் நிர்வகிக்கப்படும் காணிகளிலோ அமைந்துள்ள மரப்பொருள் / பொருளாதாரப் பெறுமதியைக் கொண்ட மரங்களை இலக்கமிட்டு பதிவேடொன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான பதிவேடொன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மரப்பொருள் / பொருளாதாரப் பெறுமதியைக் கொண்ட மரங்களை இலக்கமிட்டு பதிவேடொன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் 20 குழுக்களின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 9,695,976 இற்கான மிகையொன்றும் 2 குழுக்களின் ரூபா 590,844 இற்கான பற்றாக்குறை ஒன்றும் காணப்பட்டதுடன், அதன்படி, 16 குழுக்களின் ஒட்டுமொத்த செயற்பாட்டு நிதி விளைவுகள் ரூபா 10,100,340 இற்கான மிகையொன்றும், 05 குழுக்களின் ரூபா 851,542 ஆன பற்றாக்குறையும் காணப்பட்டது. அதனோடு ஒத்ததாக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் 22 குழுக்களின் ஒட்டுமொத்த நிதி விளைவுகள் ரூபா 143,666 இற்கான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேலதிகமாக உள்ள நிதியை வினைத்திறனுடன் முதலீடு செய்து அதிக நலாபங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் மொரவக்க, மடிஹகொடகம, பஸ்கொட, அக்குரஸ்ஸ, பெரலபனாதர, கம்புருபிட்டிய மற்றும் வில்பிட்டிய ஆகிய விவசாயச் சேவைக்குழுக்களினால் மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாத | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் அநிதியை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியைச் செயலற்ற நிலையில் வைத்திருக்காமல், முறையான அங்கீகாரத்தின் கீழ் அதிகபட்ச நலாபங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்த வேண்டும். |

இறுதியிலும் குழுவின் மாதாந்த அனைத்துச் செலவுகளையும் ஈடு செய்த பின்னர் மொத்தப் பெறுமதி ரூபா 11,135,181 நடைமுறைக் கணக்குகளில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 17 விவசாயச் சேவைக்குழுக்களின் 77 உறுப்பினர்கள் தொடர்ந்து மூன்று குழுக்கூட்டத் வாரங்களுக்கு மேல் சமூகமளிக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக விவசாய அபிவிருத்திச் சட்டத்தின் 51(6)(ஈ) (I) மற்றும் (II) பிரிவுகளின் பிரகாரம் அவர்களின் நியமனங்களை முடிவுக்குக் கொண்டுவந்து, அவர்களுக்குப் பதிலாக வேறு நபர்களைக் குழுக்களுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் இதனைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 17 விவசாயச் சேவைக்குழுக்களில் 2 முதல் 30 வருடங்கள் வரையான காலப்பகுதியாகத் தீர்க்கப்படாது நிலுவையிலுள்ள மொத்தமாக ரூபா 5,902,128 பெறுமதியான 61 வரவேண்டிய கணக்கு மீதிகளும், 2 முதல் 33 வருடங்கள் வரையான காலப்பகுதியாகத் தீர்க்கப்படாது நிலுவையிலுள்ள மொத்தமாக ரூபா 5,079,128 பெறுமதியான 64 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளும் மீளாய்வாண்டின் இறுதியிலும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் இதனைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய மீதிகளை உரிய காலப்பகுதியில் அறவிடத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வரவேண்டிய மீதிகளைக் விரைவாக அறவிடுவதற்கும், செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் தமது கடமைகள் சம்பந்தமான மாதாந்த முன்னேற்பாட்டுத் திட்டங்களையும் | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் இதனைச் சீர்செய்ய நடவடிக்கை | மாதாந்த முன்னேற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ஆற்றிய |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஆற்றிய வேலைத்திட்ட அறிக்கைகளையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றபோதிலும், மாலிம்பட விவசாய அபிவிருத்திக் குழுவில் பணிபுரியும் 05 உத்தியோகத்தர்களினால் ஆற்றிய வேலைத்திட்ட அறிக்கைகள் மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | எடுக்கப்படும். | வேலைத்திட்ட அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மொரவக்க விவசாயச் சேவைக்குழுவின் கை உழவு இயந்திரம் 2014 ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன், குத்தகைதாரரினால் 2019 ஜனவரி 07 ஆம் திகதி மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. கை உழவு இயந்திரம் மீள ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அது இயங்கு நிலையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அன்றைய தினத்திலிருந்து தணிக்கைத் திகதியான 2025 பெப்ரவரி 07 ஆம் திகதி வரையான 06 வருட காலப்பகுதிக்குள் இக்கை உழவு இயந்திரம் சம்பந்தமாக எடுக்கப்பட்ட எவ்வித நடவடிக்கைகளும் கோப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அது ஒரு செயலற்ற சொத்தாக மத்திய நிலையத்தின் வாகன தரிப்பிடத்தில் துருப்பிடித்து அழிந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது. | விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களைப் பயன்படுத்தாமல் அவை அழிந்துபோக இடமளித்தமை தொடர்பிலான கவனயீனம் மற்றும் கடமைகளை வினைத்திறனற்ற முறையில் நிறைவேற்றியமை சம்பந்தமாகப் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் வெலிகம விவசாயச் சேவைக்குழுவின் சேதனப் பசளைப் பிரிவு இயங்கியிருக்கவில்லை என்பதுடன், ஏனைய உரங்கள், மரக்கறி விதைகள், கன்றுகள் மற்றும் விவசாய உபகரணங்களின் மொத்த லாபம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 60 சதவீதம், 95 சதவீதம், 30 சதவீதம் மற்றும் 83 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. அவ்வாறே, குழுவின் மொத்த லாபமானது முழு வருமானத்தில் சுமார் 4 சதவீதம் என்ற மிகக் குறைந்த பங்களிப்பையே கொண்டிருந்தது. | விடயப்பரப்பு உத்தியோகத்தரை அழைத்து, இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சேதனப் பசளைப் பிரிவைச் செயற்படுத்துவதற்கும் அதற்கமைய இலாபத்தன்மையை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 20 விவசாயச் சேவைக்குழுக்களுக்குச் சொந்தமான 20 விவசாய வங்கிகளினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த திட்டக் கடன்கள் மற்றும் விவசாயக் கடன்களில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த ரூபா 50,483,874 கடன் நிலுவை காலாவதியாகியிருந்தது. அக்கடன்களை அறவிடுவதற்கான முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. | உடன்படுகின்றேன். 2025.09.30 ஆந் திகதியளவில் காலாவதியான கடன் தொகை ரூபா 35,249,445 வரை குறைக்கப்பட்டுள்ளது. | உரிய காலப்பகுதியில் கடன்களை அறவிடத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், வங்கிக் கடன்களை உரிய காலப்பகுதிக்குள் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் திட்டக் கடன்கள் மூலம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அவற்றை உபயோகிப்பதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். |
| (ஆ) | விவசாய வங்கிகளினால் வருடாந்த தேறிய இலாபத்தில் 10 சதவீதத்தை விவசாய அனர்த்தக் கடன் காப்பீட்டுக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றபோதிலும், கம்புருபிட்டிய விவசாய வங்கியினால் அவ்வாறு செய்யப்படவில்லை. அதற்கமைய, காலாவதியான கடன் இடர்முகாமைத்துவத்தைச் செய்தல், விவசாயிகளுக்கு நன்மைகளை வழங்குதல் மற்றும் விவசாய வங்கி முன்னோடித் திட்டத்தின் நிலைபேற்றுத் தன்மையைப் பாதுகாக்கும் நோக்கில் பேணப்பட வேண்டிய இவ்வகைய நிதியத்தை முறையாகச் செயற்படுத்தாததன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதில் இடர் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றேன். இவ்வருடத்தில் 10% அனர்த்தக் கடன்கள், கடன் காப்பீட்டுக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |